11.09.2024 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை .(ஒ.எஸ்.எண். 212/2017) திரு.டேனிஸ்.(உதவி நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம்)

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

பி.வா.சா.ஆ.1 நக்கலமுத்தன்பட்டி கிராம சர்வே எண்.147/9 ல் 50 செண்டு நிலம் அய்யம்மாள் என்பவர் ஆளுநருக்கு தானமாக கொடுக்கப்பட்ட நிலம் என்றால் சரிதான். சர்வே எண்.147/9 புஞ்சை நிலம் என பி.வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 50 செண்டு இடத்திற்கு மேல்பக்கம் 18 1/2 செண்டு இடம் காலியாக புஞ்சை நிலம் உள்ளது என்றால் கொஞ்ச துாரத்தில் வீடுகளும் உள்ளது. எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 5 வீடுகள் உள்ளது. வாட்டர் டேங்கிற்கு மேல்புறம் எந்த வீடுகளும் இல்லை என்றால் சரியல்ல. கோவில்பட்டி – திருவேங்கடம் ரோட்டிற்கு கீழ்பக்கம் வாட்டர் டேங்க் வரை எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 150 மீட்டர் துாரம் இருக்கும். 150 மீட்டர் நிலம் தமிழ அரசுக்குப் பாத்தியப்பட்ட இடம் இல்லை என்றால் சரிதான். பைப்லையன் எந்த வழியாக செல்கிறது என்றால் சர்வே எண்.147/9, 147/10 க்கு மேல்புறமாக சர்வே எண்.151/3 வழியாக செல்கிறது. பைப்லைன் சைஸ் என்னவென்றால் 3 இஞ்ச் இருக்கும். பொதுவாக வீட்டில் உள்ள பைப் லையனுக்கு 1 1/2 இஞ்ச் பைப் என்றால் சரிதான்.நக்கலமுத்தன்பட்டி வாட்டர்டேங்கிலிருந்து எத்தனை கிராமத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது என்றால் 28 கிராமங்களுக்கு செல்கிறது. சுமார் இளையரசனேந்தல் பிர்க்கா மற்றும் திருவேங்கடம் தாலுகாவில் பாதி கிராமங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. 24 மணி நேரம் தண்ணீர் கொண்டு சென்றாலும், 28 கிராமங்களுக்கு கொண்டு செல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. கூட்டு குடிநீர் திட்டத்தில் ஒரு மனிதருக்கு ஒரு நளைக்கு எத்தனை

லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது என்று கணக்கிட்டு தான் வழங்கப்படும் என்றால் சரிதான். தனிநபருக்கு ஒரு நாளைக்கு 40 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. அதில் பஞ்சாயத்து குடிநீர் திட்டங்களின் மூலம் வரக்கூடிய குடிநீர் அளவை கழித்து மீதமுள்ள அளவுக்கு இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டப்பட்டுள்ளது.நான் சொல்லுவது போன்று 28 கிராமங்களில் இதற்கு முன்னர் குடிநீர் திட்டங்கள் இல்லை என்றும்அங்கு கிணறு வெட்டி தான் தண்ணீர் எடுத்து பயன்படுத்தினார்கள் என்றால் அந்த தண்ணீரை கழித்து தான் இந்த திட்டம் வடிவமைப்பட்டுள்ளது. எனது முதல் விசாரணை நிருபண வாக்கமூலத்தில் 6 வது பாராவில் சர்வே எண்.151/3 ல் 18 1/2 செண்டில் தென்பக்கத்தில் பைப் லையன் போடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.151/3 ல் அரசாங்கத்திற்கு இடம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.151/3 ல் தென்பகுதியில் உள்ள 4 செண்டு இடம் இந்த வழக்கின் வாதிக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தின் உரிமையாளரிடம் பைப் லையன் போடுவதற்கு அனுமதி வாங்கியுளோமா என்றால் 2005 ல் திட்டம் தொடங்கி 2007 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு பராமரிப்பு கோட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு தான் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். கூட்டு குடிநீர் திட்டம் 2017 ஆம்ஆண்டு தான் போடப்பட்டது என்றால் இல்லை. சர்வே எண்.151/3 ல் தென்கடைசியில் வழக்கின் வாதியின் கணவர் 4 செண்டு நிலத்தினை ஆவண எண்.2856/1985, 05.12.1985 ம் தேதிய கிரையம் பெற்றள்ளார் என்று சொன்னால் எனது அறிக்கையில் துலங்காது. வாதியின் கணவருக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் பைப் லையனை கொண்டு போவதற்கோ பாதையாக உபயோகப்படுத்துவதற்கோ உரிமையில்லை என்றால் அந்த இடத்தில் பைப் லையன் இல்லை. நான்

முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பைப் லையன் சிமெண்ட் பைப்பா என்றால் இல்லை பி.வி.சி.பைப். வாதிக்கோ, வாதியின் கணவருக்கோ பாத்தியப்பட்ட இடத்தில் பைப் லையன் இருந்தால் அதை அப்புறப்படுத்திக்கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். அய்யம்மைாள் என்பவரிம் ஒப்புதல் வாங்கிவிட்டு பைப் லையனும், பாதையும் போட்டுவிட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் அய்யம்மாள் எனக்கு ஒப்புதல் கொடுத்தார் என்றால் ஆவணம் இல்லை. நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. சர்வே எண்.151/3 ல் அய்யம்மாள் ஒப்புதல் கொடுப்பதற்கு எவ்வித அருகதையும் இல்லை என்றாலும் அவருக்கு அங்கு இடம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக அய்யம்மாளிடமிருந்து எழுத்துப்பூர்வமாக அனுமதி பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் பூமிக்கு கீழ் சிமெண்ட் பைப்லையன் போடப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 இஞ்ச் விட்டம் உள்ள சிமெண்ட் பைப் உருவாக்க முடியாது என்றால் சரியல்ல. சங்கரன்கோவில் பராமரிப்பு கோட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டு ஒப்படைத்தற்கான எந்தவித ஆவணமும் இல்லை என்றால் ஆவணம் உள்ளது. பைப்லையன் நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணையில் சர்வே எண்.151/3 ல் தென்பக்கத்தில் செல்வதாகவும் அந்த இடம் வாதியின் கணவருக்குப் பாத்தியப்பட்டது என்றும் அதனை அப்புறப்படுத்தி வேறு வழியாக கொண்டு செல்ல வேண்டுமென்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.151/3 வழியாக பைப் லையன் கொண்டு செல்லமுடியாது என்றாலும் பாதையும் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
11.09.2024.